### இதுவரை எட்டு இயந்திரங்களை சரிபார்த்ததில் 3 இயந்திரங்களில் குறைபாடுகள் உள்ளன!

# வாக்குப் பதிவு இயந்திரங்கள் முறையாகப் பாதுகாக்கப்படவில்லை!

## வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஆய்வு செய்ததையொட்டி கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ பேட்டி!

சென்னை, ஆக.3-

வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருவது தொடர்பாக கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது:-

கொளத்தூர் உள்ளிட்ட மூன்று தொகுதிகளின் வாக்குப்பதிவு மின்னணு இயந்திரங்களை (EVM) ஆய்வு செய்து சரிபார்க்கும் பணிகள் ஜூலை 29 முதல் நடைபெற்று வருகின்றன.

வி.வி.பேட்டில் (VVPAT) பயன்படுத்தப்படும் SLU (Symbol Loading Unit) கருவி சரியாக செயல்படுகிறதா என்பதை உறுதி செய்யும் வகையில், தேர்தல் முடிவுகள் வெளியான ஏழு நாட்களுக்குள், இரண்டாம் அல்லது மூன்றாம் இடம் பெற்ற வேட்பாளர்கள் இ.வி.எம். இயந்திரங்களின் நம்பகத்தன்மையைச் சோதிக்கலாம் என்று 2024ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த அனுமதியின் பேரில், கட்சியின் சட்டத்துறை சார்பில் தமிழ்நாட்டில் ஐந்து தொகுதிகளில் இ.வி.எம். இயந்திரங்களைச் சரிபார்க்க அனுமதி கோரியிருந்தோம். தற்போது கொளத்தூர், காஞ்சிபுரம் மற்றும் ராஜபாளையம் ஆகிய மூன்று தொகுதிகளில் இந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### மறு வாக்குப்பதிவு அல்ல!

இந்த சரிபார்ப்பு நடைமுறையில், முதலில் இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளனவா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அதன் பின்னர், இயந்திரங்கள் முறையாக இயங்குகிறதா என்பதைச் சோதிக்க வேண்டும். தொடர்ந்து மாதிரி வாக்குப்பதிவு நடத்தப்பட்டு, 500 முதல் 1,400 வாக்குகள் வரை பதிவு செய்து இயந்திரங்களின் செயல்திறன் பரிசோதிக்கப்படுகிறது. இவை அனைத்தும் இ.வி.எம். இயந்திரங்களின் செயல்திறனைச் சோதிப்பதற்காக மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன; இது மறு வாக்குப்பதிவு அல்ல.

ராஜபாளையம் தொகுதியில் இதுவரை 10 இ.வி. எம். இயந்திரங்கள் சரிபார்க்கப்பட்டுள்ளன. அங்கு இந்தப் பணி மேலும் இரண்டு நாட்கள் நடைபெறும்.

காஞ்சிபுரம் தொகுதியில் 10 இ.வி.எம். இயந்திரங்களைச் சரிபார்க்கக் கோரியிருந்தோம். அதில் ஒரு இயந்திரத்தில் வி.வி.பேட் செயல்படவில்லை. மேலும், Control Unit எனப்படும் வாக்கு எண்ணிக்கைக்கான கருவியும் செயல்படவில்லை. அதேபோல், வாக்குப்பதிவு இயந்திரமும் செயல்படவில்லை.



### சரிபார்ப்புப் பணி பாதியில் நிறுத்தம்!

கொளத்தூர் தொகுதியைப் பொறுத்தவரை, மொத்தம் 14 இ.வி.எம். இயந்திரங்களைச் சரிபார்க்கக் கோரியிருந்தோம். ஜூலை 29ஆம் தேதி இரண்டு இயந்திரங்கள் சரிபார்க்கப்பட்டன. அவை சரியாக இருந்தன. ஜூலை 30ஆம் தேதி மேலும் இரண்டு இயந்திரங்கள் சரிபார்க்கப்பட்டன. அதில் ஒரு இயந்திரத்தில் வி.வி.பேட் செயல்படாததால், சரிபார்ப்பு பணி பாதியிலேயே நிறுத்தப்பட்டது.

தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, வேறொரு வாக்குச்சாவடியில் இருந்து இயந்திரம் கொண்டு வரப்பட்டு சரிபார்க்கப்பட்டது. நேற்று நடைபெற்ற சரிபார்ப்பிலும் மற்றொரு வி.வி.பேட் செயல்படவில்லை. இதுவரை சரிபார்க்கப்பட்ட ஆறு இயந்திரங்களில் இரண்டு இயந்திரங்களில் வி.வி. பேட் செயல்படாதது கண்டறியப்பட்டது.

இன்று காலை அடுத்த இரண்டு இயந்திரங்களைச் சரிபார்ப்பதற்காக கொண்டு வரப்பட்டன. வழக்கமாக ஒவ்வொரு இயந்திரமும் சீல் வைக்கப்பட்டு, அதன் மீது address tag என்கிற காகிதம் ஒட்டப்பட்டிருக்கும். அதில் எண்கள் குறிப்பி டப்பட்டி ருக்கும். வாக்குச்சாவடி எண் 75இல் வாக்குப்பதிவு செலுத்தும் இரண்டு யூனிட்களில் எண்கள் மாறியிருந்தன. அது மனிதத் தவறாகக் கருதி ஏற்றுக் கொண்டோம்.

அதனைத் தொடர்ந்து, வாக்குச்சாவடி எண் 157 இல் சரிபார்ப்பதற்காக இயந்திரங்கள் கொண்டு வரப்பட்டன.

வாக்குச்சாவடி எண் 157 இல் வாக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்த ஒரு Control Unit மற்றும் மூன்று Ballot Unitகள் இருந்தன. கொளத்தூர் தொகுதியில் 36 வேட்பாளர்கள் இருந்ததால் மூன்று Ballot Unitகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. மொத்தம் நான்கு இயந்திரங்கள் இருந்தன.

இந்த நான்கு இயந்திரங்களிலும் Address Tag இருக்க வேண்டும். அந்த Address Tagல் தொகுதியின் பெயர், இயந்திர எண், வாக்குச்சாவடி எண் உள்ளிட்ட விவரங்கள் பதிவு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரியின் கையொப்பமும் இடம்பெற்றிருக்க வேண்டும்.

ஒவ்வொரு Ballot Unitக்கும் இரண்டு Address Tagகள் இருக்கும். மூன்று Ballot Unitகளில் மொத்தம் ஆறு Tagகளும், Control Unitல் ஒரு Tagஉம் என மொத்தம் ஏழு Address Tagகள் இருக்க வேண்டும்.

### தேர்தல் அதிகாரியின் விளக்கம் ஏற்றுக்கொள்ள முடியாது!

ஆனால், அந்த ஏழு Address Tagகளும் முற்றிலும் புதியதாக இருந்தன. எந்த Tagயிலும் எந்த விவரமும் நிரப்பப்படவில்லை.

மேலும், Address Tagன் பின்புறத்தில் அரக்கு (Wax) சீல் வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இங்கு எந்த விவரமும் நிரப்பப்படாமல், அரக்கு சீல் முன்புறத்தில் வைக்கப்பட்டிருந்தது.

இது குறித்து தேர்தல் அதிகாரிகளிடம் கேட்டபோது, இது Human Error என்று தெரிவித்தனர். யாரோ ஒருவர் தெரியாமல் Address Tagஐ நிரப்பாமல் விட்டுவிட்டதாக விளக்கம் அளித்தனர். ஆனால், அந்த விளக்கத்தை எங்களால் ஏற்று க்கொள்ள முடியாது.

### வாக்குப்பதிவு இயந்திரங்கள் முறையாகப் பாதுகாக்கப்படவில்லை!

ஏனெனில், Ballot Unitகள் வாக்கு எண்ணிக்கைக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. Control Unit மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. எனவே, வாக்கு எண்ணிக்கைக்காக Control Unit திறக்கப்பட்டு மீண்டும் சீல் வைக்கப்பட்டிருந்தால், அதில் இரண்டு அரக்கு சீல்கள் இருக்க வேண்டும். ஆனால், அவை இல்லை. புதிய Address Tag மட்டுமே இருந்தது.

எனவே, வாக்குப்பதிவு இயந்திரங்கள் முறையாகப் பாதுகாக்கப்படவில்லை அல்லது பாதுகாப்பு நடைமுறைகள் சரியாகப் பின்பற்றப்படவில்லை என்பது அறிவியல் ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் எங்களுக்கு தெளிவாகியுள்ளது. எனவே, இந்தத் தேர்தல் முறையான தேர்தல் அல்ல என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஜூலை 30ஆம் தேதி மாவட்டத் தேர்தல் அதிகாரியிடம் கடிதம் வழங்கியுள்ளோம். அதில் 19 கேள்விகளை எழுப்பி, இ.வி.எம். இயந்திரங்களைத் தயாரித்த நிறுவனத்தின் பொறியாளரிடம் இருந்து அவற்றுக்கான விளக்கங்களைப் பெற்றுத் தருமாறு கேட்டுள்ளோம். அதற்கான பதில்களைப் பெற்றுத் தருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜூலை 29, 30, 31 மற்றும் ஆகஸ்ட் 1 ஆகிய நாட்களில் நடைபெற்ற அனைத்து சரிபார்ப்பு நடவடிக்கைகளும் முழுமையாக வீடியோ பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த வீடியோ பதிவுகளின் சான்றளிக்கப்பட்ட நகல்களை எங்களுக்கு வழங்க வேண்டும் என்றும் கேட்டுள்ளோம்.

### நீதிமன்றத்தை அணுகவுள்ளோம்!

மேலும், Address Tag முறைகேடு கண்டறியப்பட்ட வாக்குச்சாவடி எண் 157இன் இ.வி.எம். இயந்திரத்தை பாதுகாப்பாக சீல் வைத்து பாதுகாக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளோம். ஏனெனில், உரிய நீதிமன்றத்தை நாங்கள் அணுகவுள்ளோம். அப்போது அது முக்கிய ஆதாரமாக இருக்கும்.

இதுவரை எட்டு இயந்திரங்களைச் சரிபார்த்துள்ளோம். அதில் மூன்று இயந்திரங்களில் குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. அதாவது, 30 சதவீதத்திற்கும் அதிகமான இயந்திரங்களில் பிரச்சினைகள் இருப்பதால், இந்த முழு சரிபார்ப்பு நடைமுறையிலும் எங்களுக்கு நம்பிக்கை இல்லை.

### தேர்தல் முறையாக நடைபெறவில்லை!

இது குறித்து எங்களது கட்சித் தலைவர் அவர்களிடம் தெரிவிக்க உள்ளோம்., இனி இந்தச் சரிபார்ப்பு நடைமுறையில் பங்கேற்பது தேவையற்றது என்று முடிவு செய்துள்ளோம். இதுவரை கிடைத்துள்ள ஆதாரங்களே இந்தத் தேர்தல் முறையாக நடைபெறவில்லை என்பதை நிரூபிக்கப் போதுமானவை.

தேர்தல் ஆணையத்திடமிருந்து அனைத்து சான்றளிக்கப்பட்ட நகல்களையும் (Certified Copies) வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அவை கிடைத்தவுடன், கட்சியின் சட்டத்துறைத் தலைவரின் ஆலோசனையின்படி, தேவைப்பட்டால் உயர்நீதிமன்றம் அல்லது உச்சநீதிமன்றத்தை அணுகி, உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

இவ்வாறு கழக சட்டத் துறைச் செயலாளர் என். ஆர்.இளங்கோ பேட்டியளித்தார்.


# உடன்குடி பா.ஜ.க. நிர்வாகிகள் கழகத்தில் இணைந்தனர்!

## முன்னாள் அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் முன்னிலையில்!

உடன்குடி, ஆக.3-

உடன்குடி கிழக்கு ஒன்றியம்-பா.ஜ.க. நிர்வாகிகள் முன்னாள் அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

சோடா ரவி, அயலக அணி துணை அமைப்பாளர் டேனியல் ஜெபசிங், திருச்செந்தூர் நகர துணைச் செயலாளர் மகாராஜன் ஆகியோர் ஏற்பாட்டில் கீழ நாலு மூலைக் கிணறு கிராம பா.ஜ.க. தலைவர் ராகுல் ஊடக பிரிவு கிளை செயலாளர் முத்து சிவக்குமார், மண்டல பிரிவு கிளை செயலாளர் சூரியா, உறுப்பினர்கள் அர்ச்சுனன், சந்தோஷ், உதயநிதி, சரண், நவின் குமார், முத்து ராஜா, கங்கா துரை அக்கட்சியிலிருந்து விலகி தண்டுபத்து அலுவலகத்தில் முன்னாள் அமைச்சரும் தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.



இதில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் உமரி சங்கர், மாநில பிரச்சாரக் குழுத் தலைவர் ஜெசி பொன் ராணி, உடன்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் மதன்ராஜ், முன்னாள் ஒன்றிய செயலாளர் சக்தி வேல், மாவட்ட பிரதிநிதி ராஜபிரபு, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் செந்தில், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் அருணகிரி, கானம் பேரூராட்சி முன்னாள் தலைவர் செந்தமிழ் சேகர், தளபதி எடிசன், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் மகேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### காமன்வெல்த் – 2026 முத்தாண்டுதல் போட்டியில் பதக்கங்கள் வென்ற

# தமிழ்நாட்டின் தங்கங்கள் பிரவீன் சித்ரவேல் - செல்வபிரபுவுக்கு பாராட்டுகள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஆக.3

நேற்று முன்தினம் (01.08.2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-




**CWG2026 முத்தாண்டுதல் போட்டியில் வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்று அசத்தியுள்ள தமிழ்நாட்டின் தங்கங்கள் பிரவீன் சித்ரவேல் மற்றும் செல்வபிரபு ஆகிய இருவருக்கும் எனது பாராட்டுகள்!**

**தமிழ்நாட்டில் இருந்து தடகளத்தில் தடம் பதிக்கும் மேலும் பல இளம் புயல்களால் இந்தியா வெல்லட்டும்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் பாராட்டியுள்ளார்.

### அதிகாரம் இருக்கிறது என்ற அகம்பாவத்தில் அவதூறாகப் பொய்ச் செய்திகளை பேசிவரும்

# பச்சோந்தி நிர்மல் குமார் இனியாவது கண்ணியமாகப் பேச வேண்டும்!

## முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் கண்டன அறிக்கை!

*சென்னை, ஆக.3*

தமிழ்நாடு முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தூத்துக்குடியில் நடைபெற்ற த.வெ.க. பொதுக் கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர் நிர்மல்குமார் அரசியல் நாகரீகமின்றி முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களைப் பற்றியும், என் தந்தையார் என். பெரியசாமி அவர்களை பற்றியும் என்னைப் பற்றியும், முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் பற்றியும் அவதூறாக பொய்ச்செய்திகளை பேசியிருப்பதை வன்மையாக கண்டிக்கிறேன்.



கடந்த காலங்களில் மழை வெள்ள நேரத்தில் தூத்துக்குடியில் யாருமே களத்துக்கு வரவில்லை என வாய்க்கூசாமல் பொய் பேசியிருக்கிறார்.

எம்.எல்.ஏ. என்கிற முறையிலும் அமைச்சர் என்ற முறையிலும் தூத்துக்குடியின் அனைத்து வீதிகளுக்கும் சென்று சீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டோம். அன்றைய துணை முதல்வர், தொகுதியின் எம்.பி. உள்ளிட்டவர்கள் ஆய்வு செய்து தீர்வை ஏற்படுத்தினர்.

இது தூத்துக்குடி தொகுதி மக்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். ஆனால் அந்த நேரத்தில் நீங்கள் எல்லாம் எங்கே இருந்தீர்கள் என்று யாருக்குமே தெரியாது. கரூரில் பாதிக்கப்பட்ட மக்களை திரும்பிப் பார்க்காமல் ஓடிய நீங்கள் இதை பேசலாமா?

தூத்துக்குடியில் பல்வேறு நிறுவனங்கள், தொழிற்சாலைகளில் தி.மு.க.வினர் வசூல் செய்வதாக பொய்யாக நிர்மல்குமார் பேசியுள்ளார். அப்படி யாரிடமும் தி.மு.க.வினர் வசூல் செய்யவில்லை. தாங்கள் அதை நிரூபிக்க முடியுமா? இல்லையென்றால் பகிரங்கமாக தி.மு.க.விடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

வாய் இருக்கிறது, அதிகாரம் இருக்கிறது என எதை வேண்டுமானாலும் பேசலாம் என்ற அகம்பாவத்தை கைவிடுங்கள். பல கட்சிகள் மாறிய பச்சோந்தி நிர்மல் குமார் இனியாவது கண்ணியமாக பேச வேண்டும் என்று தனது அறிக்கையில் பி.கீதாஜீவன் கூறியுள்ளார்.

# காவிரி நீரை உடனடியாக தமிழ்நாட்டிற்கு திறந்துவிட உச்சநீதிமன்றத்தில் தி.மு.க. அவசர மனு!

## மூத்த வழக்கறிஞர் பி. வில்சனால் இம்மனுக்கள் வரைவு செய்யப்பட்டு இறுதி செய்யப்பட்டுள்ளது!

சென்னை, ஆக. 3-

திராவிட முன்னேற்றக் கழகம் விவசாயிகள் அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அவர்கள் மூலம், சிவில் மேல்முறையீட்டு வழக்கு எண் 2453/2007ல் இடைக்கால மனுவைத் தாக்கல் செய்து, தமிழ்நாட்டிற்கு காவிரி நீரை உடனடியாக திறந்துவிட அவசர உத்தரவு பிறப்பிக்கவும், 16.02.2018 அன்று உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைநடைமுறைப்படுத்தவும், காவிரி நீர் ஒழுங்குமுறை குழு(CWRC) மற்றும் காவிரி நீர் மேலாண்மை ஆணையம்(CWMA) வழங்கிய உத்தரவுகளை அமல்படுத்தவும் உச்சநீதிமன்றத்தை அணுகியுள்ளது.

இம்மனுக்கள் மூத்த வழக்கறிஞர் பி.வில்சனால் வரைவு செய்யப்பட்டு இறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில் உச்சநீதிமன்றத்திடம் பின்வரும் நிவாரணங்கள் கோரப்பட்டுள்ளன:

I. 28.07.2026 அன்று காவிரி நீர் ஒழுங்குமுறை குழு(CWRC) வழங்கியதும், 30.07.2026 அன்று காவிரிநீர் மேலாண்மை ஆணையம் (CWMA) உறுதிசெய்ததுமான உத்தரவை கர்நாடக அரசு உடனடியாக முழுமையாக செயல்படுத்துமாறு உத்தரவிட வேண்டும். அதன்படி, உச்சநீதிமன்றத்தின் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து 15 நாட்களுக்கு தினமும் 3,500 கனஅடி (கியூசெக்ஸ்) தண்ணீர் பிலிகுண்டுலுவில் திறந்துவிடவும், 29.07.2026 முதல் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையையும் ஈடு செய்யுமாறு உத்தரவிட வேண்டும்.

II. 26.07.2026 நிலவரப்படி, விகிதாச்சார (Distress Sharing) அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய 9.46 டி.எம்.சி. நீர்ப்பற்றாக்குறையை ஈடு செய்யும் வகையில், 15 நாட்களுக்கு தினமும் சுமார் 7,000 கியூசெக்ஸ் தண்ணீர் பிலிகுண்டுலுவில் கிடைக்குமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும்.

III. கர்நாடக அணைகளிலிருந்து திறக்கப்படும் நீரையும், பிலிகுண்டுலுவில் கிடைக்கும் நீரின் அளவையும் காவிரி நீர் மேலாண்மை ஆணையம்(CWMA) தினசரி கண்காணித்து, அதன் அமலாக்க நிலையை உச்சநீதிமன்றத்தில் அறிக்கையாக தாக்கல் செய்யுமாறு உத்தரவிடவேண்டும்.

IV. வழக்கின் உண்மை நிலைகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, நீதியை நிலைநாட்டுவதற்குத் தேவையான பிற உரிய உத்தரவுகளையும் உச்சநீதிமன்றம் பிறப்பிக்க வேண்டும்.

கர்நாடக அரசு, காவிரி நீர் மேலாண்மை திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள சட்டப்பூர்வ அமைப்புகளின் கட்டாய உத்தரவுகளைப் பின்பற்றாமல் காவிரி நீரை திறந்துவிட மறுத்துள்ளதால், காவிரி டெல்டாபகுதியைச் சேர்ந்த இலட்சக்கணக்கான விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை இந்த மனு சுட்டிக்காட்டுகிறது. விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், உச்சநீதிமன்றத்தின் 16.02.2018 தீர்ப்பை முழுமையாக அமல்படுத்தவும், உடனடிதலையீடு செய்யுமாறு உச்சநீதிமன்றத்திடம் இம்மனு கோருகிறது.

மேற்கூறிய மேல்முறையீட்டில் திராவிட முன்னேற்ற கழகத்தையும், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தையும் (CWMA) ஒரு தரப்பினராக இணைத்துக்கொள்ளுமாறும் தி.மு.க. கோரியுள்ளது.

### ஒருங்கிணைந்த பட்டுக்கோட்டை ஒன்றியத்தின் முன்னாள் அவைத் தலைவர்

# கழக செயல் மறவர் எஸ்.வேதைய்யன் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.3-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

ஒருங்கிணைந்த பட்டுக்கோட்டை ஒன்றியக் கழகத்தின் முன்னாள் அவைத் தலைவராக சிறப்பாகப் பணியாற்றிய பட்டுக்கோட்டை வட்டம் ஒதியடிக்காடு கழக செயல் மறவர் எஸ்.வேதைய்யன் (வயது 90) அவர்கள் வயது மூப்பின் காரணமாக நேற்று முன்தினம் (1.8.2026) மறைவெய்தினார் என்பதை அறிந்து மிகவும் வருந்தினேன்.

அவசரகால நிலைக்கு முன்பு ஒரு வழக்கின் காரணமாக திருச்சி சிறையில் கைதியாக இருந்த அந்த காலகட்டத்தில் திருச்சி சிறைக்கு சென்னை சிறைச்சாலையிலிருந்து இடம் மாறுதல் பெற்று வந்தவர்கள், சென்னை சிறைச் சாலையில் நான் உள்ளிட்ட கழக மறவர்கள் காவல் துறையால் தாக்கப்பட்ட சம்பவத்தை கேள்விப்பட்டு அதை முழுமையாக கேட்டு தெரிந்து கொண்ட இவர், அவசர நிலை நெருக்கடியில் காவல்துறை மற்றும் சிறைக் காவலர்கள் அத்துமீறல்களை விசாரிக்கப் போடப்பட்ட 'இஸ்மாயில் கமிஷன்' முன்பு தானே முன்வந்து திருச்சி சிறையில் இருந்து ஒரு கைதி என்கிற நிலையிலும் காதால் கேட்ட சிறைக் கொடுமைகளை துணிச்சலாக சென்னை சென்று சாட்சியம் அளித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கழக செயல் வீரர் எஸ்.வேதைய்யன் தஞ்சை மண்டலக் கழகத்தின் தளகர்த்தர்களாக விளங்கிய மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி ஆகியோரோடு இணைந்து கழகப் பணியாற்றியவர். அன்னாரின் மறைவு பட்டுக்கோட்டை பகுதிக் கழக தோழர்களுக்கு மாபெரும் இழப்பாகும்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.